<u>தொழிலாளர் துறை</u>

அனுப்புநர்
த.பொன்னிவளவன்,
தொழிலாளர் உதவி ஆய்வாளர்,
தாம்பரம்.

பெறுநர்
உரிமையாளர் / மேலாளர்
அனைத்து கடைகள் / நிறுவனங்கள்
தாம்பரம் ம/ சோழிங்கநல்லூர்
தாலுக்கா

<u>ந.க.எண். 41 /2022, நாள் : 10.08.2022.</u>

ஐயா,

பொருள்: புலம் பெயர் தொழிலாளர்கள் விவரம் - வலைதளத்தில் பதிவேற்றம் செய்வது – குறித்து.

பார்வை: சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் குறிப்பாணை எண்.எல்2/9320/222, நாள்: 22.07.2022.

******

மேற்பொருள் தொடர்பாக, தமிழ்நாட்டில், தொழிலாளர் துறையின் ஆய்விற்குட்பட்ட அனைத்து நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து வெளிமாநில தொழிலாளர்களின் விவரங்களையும் இத்துறையின் (https://labour.tn.gov.in/ism/) என்ற வலைதளத்தில் முழுமையாக பதிவேற்றம் செய்யுமாறு சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, தாங்கள் தங்கள் கடைகள் / [redacted] நிறுவனங்களில் பணிபுரியும் வெளிமாநில தொழிலாளர்களின் விவரங்களை மேற்கண்ட வலைதளத்தில் பதிவேற்றம் செய்து, அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொழிலாளர் உதவி ஆய்வாளர்,
தாம்பரம்.